# பொதுக்காலம் 13ஆம் வாரம் - ஞாயிறு

# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

நாம் நல்வாழ்வை பெற்றுக்கொள்ள தன் வாழ்வை கையளித்த இயேசுவின் குணமளிக்கும் வல்லமையை உணர்ந்து அவர் பாதம் தொடர அழைப்பு விடுக்கும் பொதுக்காலம் 13ஆம் ஞாயிறு திருப்பலிக்கு இறைமக்களை அன்புடன் வரவேற்கிறோம்.

தவறு என்னும் இருள் சூழும் போது இறை மன்னிப்பு என்னும் ஒளி ஏற்றப்படும் போது மனிதன் மௌனிக்கின்றான். மகிமை உண்டாகிறது.

கடவுள் மனிதனை அழியாமைக்கென்று படைத்தார் என்று இன்றைய முதல் வாசகம் தெளிவாகக் கூறுகிறது. இறைவன் அழிவு தரும் எதையும் படைக்கவில்லை. மனிதன் மகிழ்ந்திருக்கவே அனைத்தையும் படைத்தார். மனிதன் தான் பேராசையாலும், பொறாமையாலும், பிரித்தாளும் போக்காலும் தன் சுக போக வாழ்வை அனுபவிக்கும் பொருட்டு தவறுகளை தனதாக்கி அதற்கான பழியை பிறராக்கும் போது, சாவு என்பது உலகிற்கு வந்து மனிதத்தை சாகடிக்கிறது. இதற்கு திருத்தம் தான் என்ன?

"இறைவன் தந்த சந்தோஷத்தை பிறரோடு பகிர்ந்து கொள்ளுங்கள்;

பிறர் தரும் சங்கடங்களை இறைவனோடு மட்டும் பகிர்ந்து கொள்ளுங்கள்."

இன்றைய இரண்டாம் வாசகத்தில் எல்லோரும் சமநிலை அடைய வேண்டும் என்று திருத்தூதர் பவுல் கூறுகிறார். மிகுதியாக சேகரித்தவருக்கு எதுவும் மிஞ்சவில்லை; குறைவாக சேகரித்தவர்களுக்கு எதுவும் குறையவில்லை என்று மறைநூல் கூறுகிறது. இக்காலக் கவிஞனும் அதையே

"எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு

இல்லாமை இல்லாத நிலை வேண்டும்."

என்கிறான். மாற்றத்தை உருவாக்க மனதை பெரிதாக்குவோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், இறப்பை வெல்லும் இறை நம்பிக்கையை இறைவன் நமக்குத் தருகிறார். நம்பிக்கையோடு ஆண்டவரைத் தேடி வந்தவரும், ஆடையைத் தொட்டவரும் அற்புதத்தைப் பெற்றார்கள். உடலுறுப்புகளின் பலன் இல்லாதவன் கூட உலகையே திரும்பிப் பார்க்க வைக்கிறான். பறவைகள் தம் இறக்கைகளில் கொண்டுள்ள நம்பிக்கை தான் உயரே பறக்க வைக்க வைக்கிறது. நாமும் சங்கடங்களில் சர்வேஸ்ரனின் துணையையும், தோல்விகளில் அவரின் தோழமையையும் நாடும் போது நம்பிக்கை ஒளி மனதில் ஏற்றப்பட்டு, துன்பங்கள் துரத்தியடிக்கப்படும்.

விசுவாசத்தில் சூழப்பட்டு, இறைவனையும் அவரன்பையும் உணர இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எங்கள் மீட்பரே எம் இறைவா!

இத்திரு அவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரின் ஆன்மீகப் பணி மக்கள் மனதை நம்பிக்கையில் நிறைவு பெறச் செய்யும் உயிரோட்டமுள்ள பணியாக அமைந்திட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. இவ்வுலக அரசரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் நீதியின் பாதையில் நடந்து, மக்கள் நல்வாழ்வுக்குத் தேவையான திட்டங்களை செயல்படுத்தி, வாழ்க்கையில் நம்பிக்கையை விதைத்து, அறவழியில் நடக்க வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. 'நோய் நீங்கி நலமாயிரு' என்று குணமளித்தவரே இறைவா!

இவ்வுலகில் தீராத நோய்களால் பீடிக்கப்பட்டு வேதனையுறும் மக்களை உமது வல்லமையால் குணமாக்கி, சுகமான புதுவாழ்வை தந்து வழிநடத்திட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. அன்பின் பாதையில் நடக்க அழைப்பவரே எம் இறைவா!

உம்மைப் போல அன்போடு பிறரைப் பார்க்கவும், பிறரின் தேவைகளில் மனமுவந்து உதவ முன்வரவும், ஆதரவற்றோர், முதியோர் நலனில் அக்கறை காட்டவும், நல்மனதை தர வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com